DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No.511/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | ராஜேந்திரன் | Age | : | 43 |
| F/N | : | மங்களசாமி | Occupation | : | கூலி வேலை |
| Village | : | இருட்டூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of April 2024.

**08.04.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் இருட்டூரணியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 16.01.2022ம் தேதி 13.45 மணிக்கு நானும், கண்ணன் என்பவரும் கல்கிணற்றுவலசை சுடுகாடு அருகே சென்றபோது உச்சிப்புளி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், கண்ணன் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**